# திலீபன்

## ஓராண்டு நினைவு





தமிழ் பேசும் மக்களுக்கு, சாதகமில்லாததும், அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அம்சங்களுமே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளதால் தமிழீழ மக்கள் இவ்வொப்பந்தந்தின் மூலம் நிம்மதிப் பெருமூச்சு விட முடியாது.

திலீபன்

# திலீபன்!



- எமது மண்ணின் நிரந்தர விடிவிற்
காக, இறுதிவரை உயிர்நீத்த அத்தனை போ
ராளிகட்கு மத்தியிலும் திலீபனின் தியாகத்தி
ற்கு தனித்த இலக்கணங்களுண்டு.
அவனின் தியாகம் சாதாரணமானதல்ல,
ஒரு தனிமனித அர்ப்பணிப்பின் உச்சக்கட்
டம் அது!
லெப். கேர்ணல் திலீபனின் வரலாறு தமிழீழ விடு
தலைப் போராட்டத்தின் ஒரு மெய்சிலிர்க்கவை
க்கும் அத்தியாயம்.
ஆம்......
26-09-87 ம் நாள்,
தமிழீழத்தின் தெருவெங்கும் ஓடித்திரிந்து இயக்
கப்பணிபுரிந்த அந்த மெலிந்த உருவம் இறுதியி
ல் தனது கடைசிமூச்சை விடநேர்ந்து விட்ட
சக்தியற்று தன்னையே சுருக்கிக்கொண்டது.
இவனது மறைவு ஒரு மெழுகுவர்த்தியின் மௌ
னமான உருகலிற்கு ஒப்புயர்வானது.
இந்திய அமைதிப் படையினரின்
அபரூபம் தமிழ்மக்களால் முழுமையாக இனங்
காணப்படாத நேரமது.
- ஒப்பந்தத்தில் கூறப்பட்டதற்கு மாறாகச் செயற்
பட்ட இந்திய அரசிடம் ஐந்து அம்சக்கோரிக்
கைகளை முன்வைத்து ஒரு சத்திய யுத்தத்தைத்
தொடுத்தான் புலிகளின் யாழ்ப்பிராந்திய அரசிய
ற்பிரிவுப் பொறுப்பாளன் திலீபன்

இவனது போராட்டம் வெறுமனே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நலன்களை முதன்மைப்படுத்திய ஒன்றல்ல. தமிழ் மக்களின் பரந்துபட்ட தேசிய நலன்களை மையப்படுத்திய போராட்டமது. ஆயுதங்கள் அற்ற நிலையிலும் புலிகளால் முழுமையானதொரு போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது அவனது போராட்டம்.


இலட்சிய வேட்கை, கொள்கை உறுதி, அர்ப்பணிப்பு அத்தனைக்கும் ஒட்டுமொத்தமான உதாரணமாய் விளங்கிய இவனின் உயிர்த்துடிப்பான போராட்டமே இந்திய அரசின் முகத்திரையைக் கிழித்து தமிழ்மக்களிற்கு எம் உண்மையான எதிரிகளை இனங்காட்டியது.

ஈற்றிலே.....

புலிகளின் மௌனமான அழுகைக்கு மத்தியில், தாய்மார்களின் கதறலுக்கு மத்தியில், உலகெங்குமுள்ள தமிழர்களின் உணர்ச்சிப்பிரவாகத்திற்கு மத்தியில் அந்த இளம்புலியின் கண்கள் மூடிக்கொண்டன.

திலீபனின் தியாகமரணம் எமது போராட்டத்தில் ஏற்பட்ட திருப்புமுனையின் தொடக்கம் என்பதைப் புரிந்துகொண்ட இளம்புலிகள் இழப்புக்களுக்கும், வேதனைகளுக்கும் மத்தியிலும் தொடர்ந்தும் விடுதலைப்பாதையில் நடந்துகொண்டிருக்கிறார்கள்! ■

# திலீபன்-ஒரு புதிய எழுச்சி



தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் அவன் உண்ணா விரதம் இருந்த நாட்கள் தமிழர் நெஞ்சங்கள் எரிமலை ஆக்கப் பட்ட நாட்களே.

புரட்சியை விதைத்துக் கண்களை மூடினான் திலீபன்.

திலீபன் சின்ன வயதில் தாயை இழந்தவன் ஆனால், பிறப்பதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே அவன் தன் தாயகத்தை இழந்திருந்தான். 1919-ஆம் ஆண்டு சங்கிலி மன்னன் காலத்தில் தமிழீழம் போர்த்துக்கீசரால் கைப்பற்றப்பட்டது. அன்று தொடக்கம் தமிழீழ மக்கள் தமது தாயகத்தின் இறைமையை இழந்தனர். யாழ்ப்பாணத்தில் ஊரெழு என்னும் அமைதியான கிராமத்தில் பிறந்த திலீபனுக்கு அவன் அன்னையின் இழப்பைவிட - அன்னை மண்ணின் இழப்பே பெரிதாகத் தோன்றிற்று.

போர்த்துக்கீசனுக்கும் பின் டச்சுக்காரன் அவனைத் தொடர்ந்து ஆங்கிலேயன் - பின்னால் சிங்களவன் - எத்தனை ஆண்டுகளாக எத்தனை மனிதர்களுக்கு என் மக்கள் அடிமைகளாக.........இந்த உணர்வுதான் திலீபன்.

திலீபன் பாசம் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்தான். நாளை கனிகளோடு குலுங்கும் என்று அவன் தந்தை எதிர்பார்த்த கொழுத்த மாந்தோப்பு அவன். நன்கு படித்திருந்தான். நுண்ணிய அறிவு மிக்கவன். யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் அவனுக்கு இடம் கிடைத்திருந்தது. ஆனால் டாக்டராக வருவதைவிட மக்களுக்காகப் போராடவே விரும்பினான். களத்தில் நின்று போராடி - சிங்கள வெறிப்படையின் குண்டு துளைத்த உடலோடு பல வீர வடுக்களை ஏந்தியவன் திலீபன்.

திலீபனின் பள்ளி வாழ்க்கை ஒளி நிறைந்தது. லெப் கர்னல் பொன்னம்மான், லெப் கர்னல் ராதா, மேஜர் கேடில்ஸ் போன்ற மறைந்த மாபெரும்

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் எந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பயின்றார்களோ - அங்கேதான் திலீபனும் பயின்றான். படிப்பைப்போலவே விளையாட்டிலும் அவன் புலி - யாழ் மாவட்ட 'செஸ்' போட்டியில் ஒருமுறை அவனுக்கு முதல் பரிசு.

ஓர் ஆசிரியர் திலீபனைப்பற்றி இப்படிக் கூறுகிறார். ''எனக்கு இன்னும் பசுமையாக இருக்கிறது. படிப்பில் திலீபன் முதன்மையானவன். ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவனிடம் நிறைந்திருந்தது. நான் சந்தித்த மாணவர்களில் திலீபன் வேறுபட்டவன். அவன் ஒரு தனி ஆற்றல்.

சிங்கள இனவாத அரசின் கொடுமை கண்டு திலீபன் குமுறினான். பெண்கள் கற்பழிக்கப்படுவதும் - குழந்தைகள் உயிரோடு எரிக்கப்படுவதும் தமிழீழத்தில் தொடர் நிகழ்வுகளாகவே இருக்குமா? விடிவே இல்லையா? பாராளுமன்ற அரசியல்வாதிகள் மேடைகளை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மேடைகளில் ஓசைகளே நிரம்பி வழிந்தன. திலீபன் பாராளுமன்றத்துக்கு வெளியே தமிழர்களின் போராட்டம் தேவை என்பதை உணர்ந்தான். காடுகளிலும் மேடுகளிலும் விடுதலை வேட்கை கொண்டு துப்பாக்கியோடு அலைந்த, தமிழீழ மக்களின் ஒப்பற்ற தலைவர் பிரபாகரனை இந்தக் காலத்தில்தான் அவன் தலைவராய் ஏற்றுக் கொண்டான்.

23-7-1983-இல் 13 சிறீலங்கா படைவீரர்களை விடுதலைப் புலிகள் திருநெல்வேலியில் பிணங்களாய் வீழ்த்தினார்கள். சிறீலங்கா அரசு நிலைகுலைந்து போயிற்று. வெறிகொண்ட சிங்களப் பேரினவாதிகள் தமிழீழத்தை இரத்தத்தால் குளிப்பாட்ட முனைந்தார்கள். அச்சம் நிறைந்த இந்தக் கால கட்டத்தில்தான் திலீபன் குறுகிய ஒற்றையடிப் பாதைகள் வழியாகக் கிராமங்களைத் தொடர்பு கொண்டு விடுதலைப் புலிகள் இயக்க விதைகளைத் தூவினான். மிதிவண்டியில் அவன் காற்றாய்ப் பறந்த காலம் அது.

சிறீலங்கா அரசின் புலனாய்வாளர்கள் யாழ்ப்பாணத்தில் நிறைந்துபோய் இருந்தார்கள். அடையாளம் தெரியாத எந்த மனிதனும் உளவுத்துறையைச் சேர்ந்தவனாக இருப்பானோ என்று மக்கள் அஞ்சிய காலம். திலீபன் மாணவர்களையும் உழவர்களையும் தொழிலாளர்களையும் ஓடி ஓடித் தொடர்பு கொண்டான். தலைமறைவு வாழ்க்கைக்கு இளைஞர்களைத் தயார் செய்வது அன்று அவன் மேற்கொண்டிருந்த பணி.

திலீபனின் பேச்சில் அழுத்தம் இருக்கும். கத்தியைப் பல முறை தீட்டுவதைப்போல ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்வான். அவன் பேச்சுக்கள் மக்களின் காதில் விழவில்லை - நெஞ்சில் விழுந்தது. அவன் குரல் கேட்ட இடத்திலெல்லாம் மக்கள் நெருப்பாக நின்றார்கள்.

திலீபன் களம் கண்டவன். விடுதலைப் புலிகள் பெற்ற பல வெற்றிகளில் அவனுக்குப் பங்குண்டு. யாழ் மாவட்டத்தில் நடந்த பொலீஸ் நிலையத் தாக்குதலிலும் - முகாம்களை விட்டு வெளியே வர முனைந்த சிங்களப் படை வெறியர்களோடு மோதிய சண்டைகளிலும் திலீபன் துப்பாக்கியும் கையுமாக வீர உலா வந்தான். அவன் உடல் எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட நிகழ்வுகள் பல உண்டு.

நவாலி - யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஒரு கிராமம். ஒரு நாள் இயக்கத் தோழர்களைக் காணச் சென்றிருந்த திலீபன் நவாலி தெரு ஒன்றில் அவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறான். ஒரு சிங்கள பொலீஸ் ஜீப் வண்டி உறுமிக்கொண்டே பக்கத்து வீதியால் திரும்புகிறது. பதட்டம் எதுவும் இன்றி 'மெதுவாகக் கலைந்து செல்லுங்கள்' என்று நண்பர்களிடம் சொல்லுகிறான் திலீபன். சூட் கேசும் கையுமாக எங்கோ பயணம் செய்கிறவனைப்போல் பஸ்தரிப்பு நிலையத்தில் வந்து அவன் நிற்கிறான். ஜீப் வண்டி வேகமாகப் பக்கம் வருகிறது. துப்பாக்கி தாங்கிய பொலீஸ்காரர் 'ஜீப்'பில் இருந்து தாவித் திலீபனை வளைத்துக்கொள்கிறார்கள். 'போடா - போய் 'ஜீப்'பில் ஏறு' - ஒரு பொலீஸ்காரன் உறுமுகிறான். திலீபனுக்கு நிலைமை புரிகிறது. அவன் ஒரு கெரில்லாப் போராளி. நடுங்கிக்கொண்டே 'ஜீப்' வண்டியை நோக்கி நடப்பவனைப் போல் 'பாசாங்கு' செய்கிறான். திடீரென்று கையிலிருந்த சூட்கேசால்' பக்கத்தில் நின்ற பொலீஸ்காரனை ஓங்கி அடிக்கிறான் திலீபன் - மின்னல் வேக நிகழ்வுகள் - சிங்களப் பொலீஸ்படையின் இயந்திரத் துப்பாக்கிகள் அதிர்ந்து முழங்குகின்றன. ஆனால் திலீபன் அந்த நொடிப் பொழுதில் பக்கத்தில் இருந்த கடைக்குள் பாய்ந்து பின்புறமாகத் தப்பிவிடுகிறான். அவனது இடது கையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து இரத்தம் பொங்கி வழிகிறது......ஆம். குண்டுகளுக்கும் இரத்தத்துக்கும் நடுவில்தான் திலீபன் வாழ்ந்தான்.

திலீபனின் இலட்சிய வெறி - 24 மணி நேர உழைப்பு - அசையாத வீரம் - ஈடிணை அற்ற போர் ஆற்றல் - அரசியல் தெளிவு - மக்கள் நெஞ்சங்களைத் தொடும் திறன் - இயக்கத்தைக் கட்டி வளர்க்கும்



வல்லமை - இவற்றால்தான் யாழ் மாவட்டத் தளபதி கிட்டு, திலீபனை யாழ் மாவட்டத்துக்கு அரசியல் பொறுப்பாளர் ஆக்க முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்திய கெரில்லாத் தாக்குதல்களின் விளைவு 1985-இன் நடுப்பகுதியில் படை முகாம்களை விட்டு வெளியே நகர முடியாத நிலை சிறீலங்கா படைகளுக்கு ஏற்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அரசு நிர்வாகம் முற்றாகச் செயலிழந்தது. இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் நிழல் அரசாங்கத்தை நிறுவுவதில் திலீபன் இரவு பகலாக உழைத்தான்.

திலீபன் இந்தக் காலத்தில் பல அமைப்புகளை உருவாக்கினான். கிராம நீதிமன்றம் திலீபனால் உருவாக்கப்பட்டது. தமிழீழத்தின் பழமைவாத, முதலாளித்துவ அமைப்பில் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு நிவாரணம் பெற்றார்கள்.

தமிழீழப் பெண்கள் அரசியல் தெளிவு பெறவும்- ஆயுதப் போராளிகளாக மாறவும் - தமிழீழ விடுதலைப் போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவும் திலீபன் ''சுதந்திரப் பறவைகள்'' என்னும் என்னும் மகளிர் அமைப்பை நிறுவினுன்.

இந்த அமைப்பில் உருவாகிய பல பெண் விடுதலைப் புலிகளை இன்று களத்தில் பார்க்கிறோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மாணவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ''விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தை'' திலீபன் அமைத்தான். இந்த அமைப்புப் பெரும் புயலாய் வீசிற்று. மாண வர்கள் தமிழீழ விடுதலைப் போரில் வெறிகொண்டு பாய்ந்தார்கள்.

கடல் தொழிலாளர் அமைப்பு -கலாச்சாரக்குழு சீவல் தொழிலாளர் சங்கம் - கூலி விவசாயிகள் சங்கம் - அபிவிருத்திக் குழு - பத்திரிகையாள சங்கம். இவையெல்லாம் திலீபனுல் நிறுவப்பட்டவை.

தமிழீழ மக்களைத் தொடர்பு கொள்ள ஒரு செய்தி ஏடு தேவை என்பதை உணர்ந்த திலீபன் 'களத்தில்' என்ற சூடான செய்தி ஏட்டை வெளி யிட்டான். 'செல்'கள் விழுந்து வெடித்துக் கொண் டிருக்கும் இரவு நேரங்களில் அவன் 'களத்தில்' ஏட்டுக்கு செய்தி திரட்ட வீதிகளில் நடந்து கொண் டிருந்தான். தூக்கமே இல்லாத இரவுகள்......... அவன் விழித்திருந்து எழுதிய எழுத்துக்கள் யாழ் மாவட்டத்தில் மட்டுமல்ல - வவுனியா - திருகோண மலை - மட்டக்களப்பு - அம்பாறை - இங்கெல்லாம் இருந்த விடுதலைப் புலிகளுக்கும், மக்களிற்கும் அமுத மாயிற்று.

சமூக - பொருளாதார-கலாச்சார விடுதலையை, பல்வேறு அமைப்புக்கள் - ஏடுகள் போராட்டங்கள் மூலம் செயல்படுத்தி தமிழீழ மக்களின் முழுமையான விடுதலைக்குத் திலீபன் வித்திட்டான்.

திலீபன் ஆடம்பரங்களை வெறுத்தான். சுகம் அவனுக்குத் தேவைப்படவில்லை. கடைசிக் காலத்தில் அவன் கையில் இருந்தது ஒரு 'சேட்டும் ஒரு பாண்டும்' மட்டுமே. இரவு 12 மணிக்கு இரண்டை யும் தோய்த்துப் போடுவான். காலை 5 மணிக்கு மீண்டும் அவற்றையே பாதி ஈரத்தோடு அணிந்து கொள்வான்.

திலீபன் இந்தியாவை நேசித்தான். இந்திய அரசின் ஒப்புதலோடு தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும் என்று உணர்வு பூர்வமாக நம்பியவன் அவன். 29-7-87-இல் ஏற்பட்ட ராஜீவ் - ஜெய வர்த்தன உடன்படிக்கையை சிறிலங்கா அரசு மீறிய போது - இந்திய அரசிடம் நீதி கேட்டு - 5 அம்சக் கோரிக்கையை முன் வைத்துத் திலீபன் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டான் ஆனுல் இந்திய அரசின் மௌனமே திலீபனைப் பிணம் ஆக்கிற்று.

இந்தியா மீது தமிழீழ மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு இந்திய அரசு வைத்த நெருப்புத்தான் 'திலீபன் மரணம்.'

தமிழீழத்தைப் பொறுத்தவரை திலீபனின் மரணம் ஒரு புதிய எழுச்சியின் பிறப்பு ஆகியிருக் கிறது.

ஒவ்வொரு நொடிப்பொழுதும் இனி அந்த மண்ணில் போர்முரசு ஓங்கி முழங்கும்.

எத்தனை பெரிய வல்லமையையும் தமிழீழ மக்கள் துணிச்சலோடு எதிர்கொள்வார்கள்.

அந்த மக்களுக்கு திலீபன் ஒரு புலி மட்டுமல்ல -

திலீபன் ஒரு வழி

# நிலம் வெடிக்கப் போகிறது!

குரல் எடுத்ததோர் குயில் படுத்தது
குமுறி நின்றதோர் புயல் படுத்தது
தர மறுத்திடும் உரிமை பெற்றிட
தன் வயிற்றிலே போர் தொடுத்தது.
நஞ்சை தின்றிட அஞ்சிடாதவன்
நல்ல வீதியில் பாடை ஏறவா?
வஞ்சி பெற்றவா வந்து பாரடா
வாட முன்னொரு சேதி கூறடா!
உண்ணாமல் இங்கோர்
உரிமைப் போர் நிகழ்கிறது
கண்மூடிப் போகின்ற
கற்பூரம் எரிகிறது
தேரோடுகின்ற தெருவினிலே புலியொன்று
போராடிக் கிடக்கிறது.
நாளை புயல் எழும்பும்
நல்லூரின் வீதியுடன்
நீளக் கிடக்கின்ற நிலமெல்லாம்
கடலடிக்கும்
இனிமதியாய் தூங்கி
நிலம் வெடிக்கப் போகிறது!

[புதுவை இரத்தினதுரையின் கவிதையிலிருந்து]

# திலீபனின் தியாகம் - ஒரு திருப்பத்தின் தொடக்கம்



1987 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி.

- உலக வரலாற்றில் தியாகத்திற்கு உன்னத அர்த்தம் கொடுக்கப்பட்ட தினம்
- நீர் கூட அருந்தாது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு, அங்கம், அங்கமாக தன்னை இழந்து உயிர் நீத்த திலீபன் எம்மை விட்டுப் பிரிந்த தினம்.
- அகிம்சை, சாத்விகம், சமாதானம் என்ற ஆடை அணிகலன்களை அணிந்து தன்னை அலங்கரித்து நின்ற பாரதம் உலக அரங்கிலும் தமிழீழ மக்கள் முன்னும் நிர்வாணமாக்கப்பட்ட தினம்
- காந்தி பிறந்த மண்ணில், காந்தியம் கொல்லப்பட்டு விட்டதை உறுதிப்படுத்திய தினம்
- இந்தியாவில் உரிமைகளுக்காகப் போராடும் தேசிய இனங்கள் பலவும் ஆயுதப் போராட்டம் நடத்துவதன் காரணத்தை எமக்கு தெளிவாகப் புலப்படுத்தி

திலீபனை நாம் ஏன் இழக்க வே
ண்டி ஏற்பட்டது? திலீபனின் கோரி
க்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கப்பட
முடியாதவையா? திலீபனின் தியாக மர
ணம் புலப்படுத்துபவை எவை?

1987 ஆம் ஆண்டு யூலை
மாதம் 29 ஆம் திகதி எமது போராட்
ட வரலாற்றின் திருப்பம். போராட்
டத்தில் ஒரு மந்த நிலையினைத் தோற்று
வித்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம்
எமது பிரச்சனைகளை எந்த வகையிலும்
தீர்க்காத போதிலும் இந்திய
இராணுவத்துடன் ஏற்படக்கூடிய மோதலை
த் தவிர்க்க வேண்டும் என்பதன் அடிப்ப
டையில் ஒப்பந்தத்தோடு இணைந்து செ
ல்ல விடுதலைப்புலிகள் தீர்மானித்தனர்.

ஒப்பந்தத்திற்கிணங்க ஆயுத ஒப்படை
ப்பு நடைபெற்ற பின்னர், தமிழ்பேசும்
மக்களின் நலன்களைப் பேணுவ
தற்கு எந்தவிதமான நடவடிக்கைக
ளையும் இந்திய அரசு எடுக்கவில்லை. மா
றாக தமிழ்பேசும் மக்களை ஒடுக்கு
ம் ஸ்ரீலங்கா அரசுக்கு உறுதுணையாக
நின்றது இந்திய அரசு.

ஒப்பந்தத்தில் எம
க்குச் சார்பாக கூறப்பட்டிருந்த ஒரு சில வி
டயங்களைக் கூட நிறைவேற்றுவ
தற்குக் கூட ஸ்ரீலங்கா அரசு தயாரா
க இருக்கவில்லை. ஸ்ரீலங்கா அரசினை
நிர்ப்பந்தித்து எமக்குச் சார்பான அம்சங்
களை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடி
க்கைகளை இந்திய அரசு எடுக்கவில்லை. த
மிழ்பேசும் மக்கள் நலன்களைப் பேணுவ
தற்காக வழங்கிய தனது வாக்குறுதி

**ஸ்ரீலங்கா அரசின் ஒப்பந்த மீறல்களைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.**

களையும் நிறைவேற்றுவதற்கு இந்திய அரசு முன்வரவில்லை.

இதன் விளைவு ----

புனர்வாழ்வு என்ற போர்வையில் புதிய சிங்களக் குடியேற்றங்கள் ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டன. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மீண்டும் ஸ்ரீலங்கா பொலிஸ் முறைமை அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

ஒப்பந்தத்திற்கமைய விடுதலை செய்யப்பட வேண்டிய அரசியல் கைதிகள் முறையாக விடுதலை செய்யப்பட வில்லை. 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட்

க்குக் கிழக்குப் பகுதிகளில் நீக்கப்பட வேண்டிய அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வில்லை. வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளின் செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்படவில்லை.

இடைக்கால அரசு அமைக்கப்படும் என்ற செய்தி இடைக்கால நிர்வாகம் என உருமாறி இறுதியில் இடைக்கால ஆலோசனைச் சபைதான் அமைக்கப்படும் என்றவாறு வெளிவரத் தொடங்கியது. இவை மட்டுமல்ல இந்திய இராணுவத்தின் உதவியுடன் ஏனைய குழுக்கள் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் ஆரம்பித்தன.

**திலீபனின் கோரிக்கைகள் இந்தியாவினால் இலகுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கக் கூடியவையே.**

தமிழ் பேசும் மக்களின் நல
ன்களைப் பேணுவதனையும் பாதுகாப்பை உ
றுதிப்படுத்துவதனையும் பொறுப்பெடுத்துக்
கொண்ட இந்தியா, அது குறித்து அலட்
சியமாக இருந்தமையால் மக்களின் நலன்
கள், உறுதி மொழிகள் மறுக்கப்பட்டன,
போராளிகளின் உயிர்பாதுகாப்புக்கூட
உத்தரவாதப்படுத்தப்படவில்லை.

இந் நிலையைக் கண்டித்து
1987ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம்
திகதி இந்திய இராணுவ முகாம்களின் முன்
னிலையில் போராட்டம் நடாத்தப்பட்டது.
வெற்றிகரமாக நடாத்தப்பட்ட இப்போரா
ட்டத்திற்கு உரிய மரியாதை அளிக்கப்பட
வில்லை.

இதனைத் தொடர்ந்து போராட
வேண்டியது தவிர்க்க முடியாததாகியது.

மேலும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கென அம்ச
ங்களை உள்ளடக்காமல் கைச்
சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில், மேற்சொன்
பாகக் குறிப்பிட்ட எந்த விடயங்களை
யாவது அமுல்படுத்துமாறு வற்புறுத்தி போ
ராட்டங்களை நடாத்த வேண்டியமைக்கு ஒ
ப்பந்தம் மேலும் எதிரானவகையிலே அமு
லாக்கப்படத் தொடங்கியது.

இந்நிலையில் தான் விடுத
லைப்புலிகள் ஐந்து கோரிக்கைகளை முன்வை
த்து, அவற்றை நிறைவேற்றுவது தொ
டர்பான பதில் எதிர்பார்த்து இருபத்துநா
ன்கு மணி நேர கால அவகாசத்தை இந்திய
அரசுக்கு வழங்கினார். இக்கால எல்லை
க்குள் உரிய பதில் கிடைக்காவிடின் சாகு
ம் வரை உண்ணாவிரத போராட்டத்தை
ஆரம்பிக்க போவதாக அறிவித்தனர். இன்

வைக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளாவன

1. பயங்கர வாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் அல்லது தடுப்புமுகாம்களில் வாடும் சகல தமிழ் மக்களும் விடுவிக்கப்பட வேண்டும்.

2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை சகல புனர்வாழ்வு வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

4. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5. அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவற்படையினரின் ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பாடசாலைகளில் குடி கொண்டுள்ள ஸ்ரீ லங்கா இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

இவை ஒப்பந்தத்தில் அமைந்த சாதாரண கோரிக்கைகள். இந்திய அரசு நினைத்திருந்தால் இவற்றை நிறைவேற்றக்கூடிய அடிப்படைகளை ஒரு சில மணித்தியாலத்திற்குள் செய்திருக்க முடியும். ஆனால் நடந்தது என்ன?



வழங்கப்பட்ட இருபத்து நான்கு மணி நேரக்கால அவகாசத்துக்குள் எந்தவிதமான திருப்தியான பதிலும் இந்திய அரசால் வழங்கப்படவில்லை.

அறிவிக்கப்பட்டபடி 1987ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் திகதி திலீபன் தியாக வேள்வியில் குதித்தான்.

திலீபனின் தியாகப் போராட்டத்திற்கு மக்கள் தங்களை இணைத்துக்கொண்டனர். ஆதரவுப் போராட்டங்களில் அணி அணியாகக் கலந்து கொண்டனர். வீதிகள் எங்கும் மக்கள் அலை ஆர்ப்பரித்து எழுந்தது. ஸ்ரீலங்கா அரசு பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. இந்திய இராணுவத்தினர் வீதியில் நடமாடித்திரிய முடியாமல் வீதித்தடைகள் மக்களால் அமைக்கப்பட்டன. மெல்லத்தவ. தி

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் இதே கோரிக்கையின் அடிப்படையில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் நீர்கூட அருந்தாது உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். மக்களும் பல இடங்களில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். தமிழீழம் எங்கும் போராட்டச் சூழல். எங்கும் உரிமைக் குரல்கள்

விடுதலைப்புலிகளின் பலம் ஆயுதத்தில் மட்டும்தான் என எண்ணியிருந்த இந்திய ஆட்சியாளர்கள் திகைத்தனர். செய்வதறியாது தவித்தனர். அவர் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அவர்களின் வரட்டுக் கௌரவம் இடம் கொடுக்கவில்லை. ஒரு சிறிய அமைப்பின் முன் பெரிய வல்லரசு பணிவதா என்ற இறுமாப்பு

பும் அகங்காரமும் அவர்களிடம் இருந்
ததே தவிர கோரிக்கைகளின் நியாயத்தை
பற்றி அவர்கள் அக்கறை கொள்ளவி
ல்லை.

போராட்டத்தை எவ்வாறு எதி
ர் கொள்வது எனத் தெரியாத இந்தி
ய அதிகாரிகள் போராட்டத்தை
கொச்சைப்படுத்த நினைத்தனர். தங்கள
து சகல பிரச்சார சாதனங்களை
யும் முழுமூச்சுடன் முடுக்கி விட்டனர்
இருந்தும் தமிழீழ மக்கள் முன் இந்தியா
தனது சுயரூபத்தை வெளிப்படுத்தி தன்
னைத் தானே அம்பலப்படுத்தி ; கொ
ண்டதைத் தவிர வேறு எதையும் இப்
பிரச்சாரங்கள் மூலம் சாதிக்கவில்லை.

போராட்டத்தின் தொட
ர்ச்சியிலேயும் வளர்ச்சியிலேயும் அவதா

த்த முன்வந்தது. காலம் தாழ்த்தி பேச்
சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் இந்
தியாவின் விடாப்பிடியான போக்கி
னால் உடனடி முடிவேதும் எடுக்கப்பட
வில்லை.

1987 ஆம் ஆண்டு செப்டம்பர்
மாதம் 26 ஆம் திகதி காலை திலீபனின்
உடல் நிலை மிகவும் மோசமடைந்
தது. அதே தினம் இரண்டாவது தட
வையாக இந்தியத் தூதுவர் தீக்ஷித்
விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகர
ன் அவர்களுக்கிடையில் பேச்சுக்கள்
நடைபெற இருந்தன. ஆனால் பேச்
சுக்கள் ஆரம்பிக்கப்படும் வரை திலீ
பனின் உயிர் காத்திருக்கவில்லை.

உரிய நேரத்தில் உரிய
நடவடிக்கைகளை இந்திய எடுக்

திருந்தால் திலீபனை இழந்திருக்கவே
ண்டிய நிலை எமக்கு ஏற்பட்டிரு
க்காது!

நீரருந்தாது உண்ணாவிரதம் இருக்கும்
ஒருவர் கூடுதல் பதினைந்து தின
ங்கள் தான் உயிர்வாழ முடியு
மென்பது ஒரு பொதுவான
மருத்துவக் கணிப்பு இது இந்தி
ய ஆட்சியாளர்களுக்கு தெரியா
மல் இருக்க முடியாது ஆனால் அவர்க
ளின் அதிகாரமும் அகங்காரமும் ஒரு
நல்லவனை எம்மிடமிருந்து பிரித்துவிட்
டது

இந்தியா உண்மையில் எமது
நலன்களில் அக்கறை கொண்டுள்
ளதா? நாம் கௌரவமாக சுபிட்சமாகி
ருந்து வாழ வேண்டும் என்பதுதானா
இந்தியாவின் விருப்பம்! தமது ...
ப்பின இந்தியா உறுதிப்படுத்தியதா? இவை
வ அனைத்துக்கும் திலீபனின் விடை



யத்தை இந்தியாவின் அணுகுமுறை
பதிலளித்து விட்டது. எமது இரத்
த்தையும் சதையினையும் தியாக
த்தினையும் தனது நலன்களுக்காக
பயன்படுத்திக் கொண்டுவிட்டு எம்மை
அடக்கும் பொறுப்பை ஸ்ரீலங்கா அர
சுடன் இணைந்து செய்வதற்கு இந்
தியா தயாராகிவிட்டது என்
பதையும் திலீபனின் மரணம் எமக்
கு புலப்படுத்தியது!



# திலீபனின் இறுதி பேச்சுக்களில்...!

" நானோ நான் சுய நினைவுடன் இருப்பதை தெரி
யாது. அதனால் தான் இன்று உங்களுடன் பேச
வேண்டும் என விரும்பினேன். நாம் எமது இல
ட்சியத்தில் மிக உறுதியாக இருக்கின்றோம் ஏற்க
னவே 650 பேர் இலட்சியத்துக்காக மரணித்
து விட்டனர் .......... எனக்கு முன் சென்
ற 650 பேரும் எனக்குத் தெரியவே இறந்தார்
கள் அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்
பதை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன்.

தனது உயிரை சிறிதும் மதியாத.

இவர்தான் உங்களுக்குக் கிடைத்துள்ளார் அ
ந்தப் பெரும் வீரனின் தலைமையில் நீங்கள் கிள
ம்புங்கள்! ஓர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். ந
ங்கள் நிச்சயமாகத் தமிழீழம் காண்போம்
நான் அதை வானிலிருந்து எனது 650 தோ
ழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மன நி
தியாக தற்போது நான் உணர்கின்றேன். என்

- - - -

எமது மக்களின் விடிவிற்காக நான் பூரண மன
திருப்தியுடன் இவ் உண்ணாவிரதத்தில் இறங்கி
னேன் எனக் கூறி உங்களிடமிருந்து விடைபெறு

கின்றேன் விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை
யில் தமது உயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை
நினைக்கிறார்கள். தெளிவான, உறுதியான, இலட்
சியத்துடன் இருக்கிறார்கள். எமது இலட்சியத்
தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடையவே
ண்டும் என்பதே எனது இறுதி ஆசை"

—(17-09-1987)

---

நான் இன்று பேசுவேன் என்று நேற்று நினைக்கவி
ல்லை உங்களின் உற்சாகமும் எழுச்சியும் ஆதர
வும் தான் என்னை இன்று பேச வைத்துள்ளது. இ
ப் போராட்டம் மக்கள் போராட்டமாக மலர்வ
தற்கு மக்கள் எல்லோரும் தயாராக வேண்டும்.
.......... தொடர்ந்து பேசவே நான் விரும்
புகிறேன் ஆனால் என்னால் பேசமுடியவில்லை
நான் மீட்கப்படமுடியாத இடத்திற்குச் சென்
று கொண்டிருக்கிறேன்.

—(18-09-1987)

## யாழ் கோட்டை முன்பாக, 07.09.87 இல்.

"இதோ உங்கள் முன்பாகவுள்ள கோட்டையை ஒ
ல்லாந்தர் கட்டினார். இந்தக் கோட்டைக்குப் பி
ன்னர் ஆங்கிலேயர் வந்தனர். பின்னர் சிங்க
ளவர் வந்தனர். இப்போது இந்திய இராணுவம்
நிலை கொண்டுள்ளது. இந்திய இராணுவம் அக
ன்று எப்போது கோட்டையின் மீது புலிக் கொ
டி பறக்கின்றதோ அப்போது தான் எமக்கு விடு
தலை கிடைத்த நாளாகும். நாம் நிம்மதியாகத்
தூங்கும் நாளாகும்

"சென்று வா, வீரனே!
உன் நெஞ்சு கனத்திருக்கிறது
என்பதை நானறிவேன்.
இடிந்து கிடக்கும் உன் சுவர்களை நோக்கி
இனியும் அந்த நாய்கள் ஓடிவரப் போவதில்லை.
உன் உயிரைக் கேட்டார்கள்.
உன் ஒரேயொரு சொத்து அது
அதைக்கூட உன்னிடமிருந்து பறித்து விட்டார்கள்."

(பலஸ்தீனப் பாடல் ஒன்றிலிருந்து)

"தமிழீழ தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பியவன் திலீபன்."
— தலைவர் பிரபாகரன்



"தமிழீழ விடுதலைக்காக விடுதலைப்புலிகள் இயக்கம் பல வீரகாவியங்களைப் படைத்திருக்கின்றது. ஆனால் திலீபனின் தியாகமோ ஒரு வரலாற்று நிகழ்ச்சியை உருவாக்கியது மட்டுமன்றி தமிழீழ தேசிய ஆன்மாவையே தட்டி எழுப்பியுள்ளது அது மட்டுமன்றி பாரத நாட்டையே தலை குனியவைத்ததோடு உலகின் மனச்சாட்சியையும் தீண்டி விட்ட நிகழ்ச்சியுமாகி விட்டது.

ஓர் உயிர் உன்னதமானது, அந்த உயிரிலும் மகா உன்னதமானது எமதுரிமை எமது சுதந்திரம், எமது கௌரவம். திலீபன் தான் நேசித்த மக்களுக்காகவும், மண்ணிற்காகவும் பெரியதியாகம் புரிந்திருக்கின்றான் அந்த அற்புதமான அர்ப்பணிப்பு செய்த திலீபன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாதவன் வரலாற்றுப் புருஷனாக வாழ்ந்து கொண்டிருப்பான்."



# தியாக தீபம் திலீபன்

- நெடுமாறன்

யாழ்ப்பாணத்தில் 1987, செப்டெம்பர் 15ஆம் திகதி திலீபன் சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கிய செய்தி கேட்டு அளவற்ற வேதனையில் ஆழ்ந்தேன். இரண்டு நாட்களில் எனக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனிடமிருந்து அவசர அழைப்பு வந்தது. அந்த அழைப்பினையேற்று உடனடியாக யாழ்ப்பாணம் புறப்பட்டேன்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளின் அலுவலகத்தில் "தம்பி" திரு. பிரபாகரன் அவர்களையும் மற்ற முக்கிய தளபதிகளையும் சந்தித்தேன்.

திலீபனின் உண்ணாவிரதத்தையொட்டி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எழுச்சியை நேரில் காணவும், அவற்றை வெளியுலகத்திற்குத் தெரியப்படுத்தவும் இந்திய அமைதிப்படை உண்மையில் என்ன செய்கின்றது என்பதை அறிந்து கொள்ளவுமே என்னை யாழ்ப்பாணம் வரும்படி "தம்பி" அழைத்திருக்கின்றார் என்பது எனக்குப் புலனாயிற்று.

இதற்குப் பிறகு திலீபனைப் பார்க்க என்னை அழைத்துச் செல்லுமாறு திரு. மாத்தையாவிடம் தம்பி கூறினார். நான், திரு. திலகர், திரு. மாத்தையா ஆகியோர் திலீபனைப் பார்க்கச் சென்றோம்.

1985ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் நான் தமிழீழத்தி

இரகசியச் சுற்றுப் பிரயாணம் செய்தபோது என்னுடனேயே இருந்தவர்களில் திலீபனும் ஒருவர். இலட்சியவெறியும் தியாக வேட்கையும் நிறைந்த இளைஞர் அவர். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களிடம் அவருக்கிருந்த செல்வாக்கினைப் பார்த்து நானே வியந்திருக்கின்றேன். இலட்சியவெறிகொண்ட அந்த வேங்கை கிடந்த நிலையைப் பார்த்து நான் கலங்கினேன்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் கோவில் முன்பாக உள்ள திடலில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் ஆயிரக்கணக்கான தாய்மார்கள், குழந்தைகள் உட்பட ஏராளமான மக்கள் கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தனர். அமைந்த மேடையில் திலீபன் சோர்ந்து படுத்துக் கிடந்தார்.

9 நாட்கள் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாநோன்பிருந்த திலீபன் மிகவும் சோர்வாயிருந்தார். அவரை அண்மையில் பார்த்தபோது என் கண்கள் கலங்கின. நான் வந்திருப்பதை உரத்த குரலில் திரு. மாத்தையா அவரிடம் கூறியபோது திலீபனின் கண்கள் பிரகாசித்தது. அவருடைய கரங்களை எனது கரங்களால் பற்றிக் கொண்டு என் விழிகளில் ஒற்றிக் கொண்டேன். திலீபன் [illegible]களுடைய தியாகம் உன்னதமானது. ஈடு இணையில்லாதது. 5 கோடி தமிழர்களின் சார்பில் உங்கள் தியாகத்துக்குத் தலை வணங்கவே நான் வந்திருக்கின்றேன். உங்களுடைய ஒப்பற்ற தியாகம் ஒருபோ

தும் வீண்போகாது" என்று நா தழுதழுத்து விம்மி கூறினேன்.


என்னிடம் ஏதோ சொல்லுவதற்கு அவர் முயன்றார். அவர் வாயிலிருந்து சப்தம் வெளிவர மறுத்தது. சிரமத்துடன் சொன்னது இதுதான்.

"அண்ணா! நீங்கள் இரக்கமாக இருக்கச் சொல்லுங்கள். உறுதியாக இந்தப் போராட்டத்தை முன்நடத்திச் செல்லச் சொல்லுங்கள். மக்களை நம்புங்கள். மக்கள் விழிப்புற்றுவிட்டார்கள்" என்று கூறிய போது அந்த வீரத்திருமுகத்தில் தோன்றிய ஒளியை என்னால் என்றும் மறக்கவியலாது.

மக்களிடமும் தலைவர் பிரபாகரனிடமும் அவருக்கிருந்த எவ்வளவு நம்பிக்கை. மரணப்படுக்கையிலும் மனவுறுதி குன்றாத அவரின் நிலை என்னை நெகிழவைத்தது.

அன்றும் அதைத் தொடர்ந்த மறு நாளும் அதற்கு அடுத்த நாளும் திலீபனை காலையிலும், மாலையிலும் சென்று பார்த்தேன். என்னுடன் பேசிய அந்த நாளே அவர் நினைவிழந்துவிட்டார். மரணவாயிலில் அந்த மாவீரன் மெல்ல மெல்ல நுழைந்து கொண்டிருந்தான் என்பது நன்றாகத் தெரிந்தது.

திலீபனின் உண்ணாவிரதத்தையொட்டி தமிழீழமெங்கும் கொந்தளித்ததை சொல்லில் அடங்கியாகாது. நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் அலை அலையாக உண்ணாவிரதத் திடலை நோக்கி வந்தவண்ணமிருந்தனர். உணர்வ



உணவை [illegible] திலீபன்

ங்களும், ஆர்ப்பாட்டங்களும், மறியல்ப்
போராட்டங்களும், உண்ணாவிரதப் போராட்
டங்களும் எல்லா ஊர்களிலும் நடத்தப்பட்
டன. யாழ் நகரம் எரிமலை கொதிப்பது போல்
க் கொதித்துக் கொண்டிருந்தது.

செப்டம்பர் 25ம் திகதி திட்டந்
தீட்ட ஒருவர் சந்திக்கும் மேம்பட்ட மாணவர்
கள் ஒன்று திரண்டு திலீபனின் உண்ணாவிர
தத்திற்கு ஆதரவாகப் பிரமாண்டமான ஊ
ர்வலம் ஒன்றை நடத்தினார்கள். யாழ்நக
ரத்தின் வீதிகளிக் கண்கலங்கவைத்த இந்த
ஊர்வலம் இறுதியாக இந்திய அமைதிப்ப
டையிருந்த யாழ்க் கோட்டையைச் சுற்றி
வளைந்து முற்றுகையிட்டது. யாழ்க் கோட்டை
க்கு முன்னால் மாணவர்கள் நடத்திய அந்
த ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தபோது பிரமிப்

புரட்சியின் போது "பாஸ்டின்" சிறையைச் சு
திவரித்த பிரெஞ்சு மக்கள் நடத்திய ஆர்ப்பா
ட்டம்தான் என் நினைவுக்கு வந்தது. "அடே
அப்பா! மாணவர்களுக்குத்தான் எவ்வளவு
உணர்ச்சிவேகம்!" ஆவேசமான கோஷ
ங்களை முழங்கினார்கள். அந்தக் கோஷங்
களில் இந்திய எதிர்ப்புணர்வு பளிச்சிட்டது.

எது நடைபெற வேண்டுமென்
று ஜெயவர்த்தன விரும்பினாரோ அது ந
டைபெறுவதை உணர்வு ரீதியாக நான்
பார்த்தேன். இந்திய அரசுக்கும் - ஈழத்
தமிழருக்குமிடையே மோதல் உருவா
கவேண்டுமென்று ஜெயவர்த்தன விரும்
பினார். அதற்காக எல்லாவேலைகளையும் செ
ய்தார். அவரது அந்த விருப்பத்தை இந்தி
ய அதிகாரிகள் கச்சிதமாக நிறைவேற்றி
னார்கள். இந்திய அதிகாரிகளின் கவன

ன அணுகுமுறையின் விளைவாக இந்திய
எதிர்ப்புணர்வு மக்களிடையே கொ
ழுந்து விட்டு எரிந்தது. செப். 15ல்
திலீபனின் உண்ணாவிரதம் தொடங்கிற்று
அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்
பாக நிலைமையை விளக்கி பிரபாகரன்
தீட்சித்துக்கு கடிதம் எழுதினார். ஆனால் அதை
தீட்சித் அலட்சியம் செய்தார். திலீபன்
உண்ணாவிரதம் தொடங்கி 5 நாட்களுக்
குப் பிறகு செப்டம்பர் 19ம் திகதி இந்
திய ராணுவ அதிகாரி பிரிகேடியர்.
பர்னாண்டோ உண்ணாவிரதப் பந்
தலுக்கு வந்து விடுதலைப் புலிகள் இயக்கத்
தைச் சேர்ந்தவர் மாத்தையாவைக் கண்டு பே
சினார். திலீபனின் உண்ணாவிரதத்தைப் ப
ற்றி பேச வந்திருக்கின்றார் என்று நினைத்
தார்கள் அவர் பேசியதைக் கேட்டு அதிர்ச்சி

யடைந்தார்கள். திலீபன் உண்ணாவிரதம் இருப்பதைப் பற்றி கொஞ்சமும் கவலைப் படாமல் புலிகள் வைத்துள்ள ஆயுதங்களை ஒப்படைக்கும் படியும் அவர்கள் சிறைப் பிடித்துள்ள சிப்பாய் கைதிகளை விடுவிக்கும் படியும் அவர் கூறினார். உண்ணாவிரதமிருக்கும் பந்தலுக்கே வந்து அதைப் பற்றி பேசாமல் புலிகளை வம்புக்கிழுக்கும் தொரணையில் இந்திய இராணுவ அதிகாரி நடந்துகொண்டார்.

திலீபனின் உண்ணாவிரதம் குறித்து தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களை விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திலகரும் மாத்தையாவும் சந்தித்து பேசி நிலைமைகளை எடுத்துக்கூறிய போதும் அவரும் ஆணவமாக நடந்துகொண்டார். பிரதமர் ராஜீவ் காந்தியின் நேரடிப் பிரதிநிதியாகத் தன்னை எண்ணிக்கொண்டு "திலீபன் உண்ணாவிரதத்தால் ஏற்படும் எந்த விளைவுகளையும் சந்திக்க பாரதம் தயாராக இருப்பதாக" அவர் கூறினார். அவரின் இந்த அறிக்கை தமிழ் மக்கள் மத்தியில் ஆறாத புண்ணை ஏற்படுத்தியிருப்பதையும் நான் பார்த்தேன்.

செப்டெம்பர் 20ம் திகதியன்று யாழ்ப்பாணம் வந்த இந்தியத் தூதவர்- உதவி. சென் "இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராகவும், இந்திய அமைதிப்படைக்கு எதிராகவும் விடுதலைப் புலிகளின் இயக்கம் விஷமத்தனமான பிரச்சாரம் செய்கின்றது. இத்தகைய உ



ண்ணாவிரதப் போராட்டங்களினால் இ
ந்தியாவை நிர்ப்பந்திக்க முடியாது" என்
று எச்சரித்தார். இந்தப் போராட்டம் இ
ந்திய அரசுக்கு எதிரானது அல்லவென்றும்
இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை சிங்கள
அரசு திட்டமிட்டு மீறுவதற்கு எதிரானது
என்பதும் விடுதலைப் புலிகளின் இயக்கத்
தலைவர்கள் அவரிடம் எடுத்துக் கூறியபோ
தும் அவர் அதை ஏற்கவில்லை.

செப்டெம்பர் ௨௨ஆம் திகதி

அன்று இந்தியப் அமைதிப்படை தலைவர்
ஜெனரல் ஹர்கிரத்சிங், மற்றும் டில்லி
யிலிருந்து வந்த பிரிகேடியர் ராகவன்
விமானப்படை அதிகாரி ஜெயக்குமார், கப்
பற்படை அதிகாரி அபயசாந்தர் ஆகியோர்
யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலி இயக்
கத் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார்கள்
அவர்களும் திலீபனின் உண்ணாவிரதத்தை
ப்பற்றி பேசவரவில்லை. சிங்களப் போலீ
சுக்குப் பதிலாக இந்திய மத்திய ரிசர்வ்
போலீசைக் கொண்டுவருவதுபற்றியே
அவர்கள் பேசினார்கள்.

செப்டெம்பர் 24 ஆம்
தேதியன்று இந்தியத் தூதுவர் தீட்சித்
யாழ்ப்பாணம் வந்து பிரபாகரனைச் ச
ந்தித்தார். 5 அம்சக் கோரிக்கைகள்

குடிநீர் எதையும் வாங்கிக் குடிக்கவும் அவர் தயாராகயில்லை. இந்திய அரசுடனும் இலங்கை அரசுடனும் ஆலோசித்து 48 மணிநேரத்துக்குள் முடிவு தெரிவிப்பதாக அவர் பேசினார். "திலீபனை நேரில் சந்தித்துப் பேசுங்கள். நீங்கள் ஒப்புக்கொண்டால் உண்ணாவிரதத்தை நிறுத்தலாம்" என்று பிரபாகரன் அழைத்த போது அதற்கு மறுத்துவிட்டார்.

நோர்வே, சுவீடன், பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் தூதுவர்கள் யாழ்ப்பாணம் வந்து திலீபனைப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். ஆனால் யாழ்ப்பாணத்துக்கு இருமுறை வந்த தீட்சித் திலீபனைப் பார்ப்பது தனது கௌரவத்துக்கு ஏற்றதல்ல என்று நினைத்தார்.

திலீபன் பிணமான பிறகு அவசர அவசரமாக யாழ்ப்பாணத்திற்கு வந்து 5 அம்சக் கோரிக்கையை ஏற்பதாகவும், அவற்றை உடனே செயற்படுத்துவதாகவும் அறிவித்த தீட்சித் அதை முன்னதாக செய்திருப்பாரேயானால் திலீபனின் உயிரை காப்பாற்றியிருக்க முடியும். அவரின் அலட்சிய போக்குத்தான் திலீபனின் உயிரை பறித்தது.

திலீபனின் உயிர்த்தியாகம் தமிழர்களின் உள்ளங்களில் ஆறாத ரணத்தை ஏற்படுத்திவிட்டது. யாழ்ப் பகுதி முழுவதும் திலீபனின் உடல் எடுத்துச் செல்லப்பட்டபோது நானும் உடனே சென்றேன். கறுப்புக்கொடி ஏற்றாத வீடு இல்லை. "அப்பு, எங்கே ராஜா"

எனக் கதறி அழாத தாய்மார்கள் இல்லை
எங்கும் துக்கம், எங்கும் துயரம், முச்சந்
திக்கு முச்சந்தி வாழை மரங்களாலும்
தென்னங் குருத்துக்களாலும் அலங்
கரிக்கப்பட்டு திலீபனின் திருவுருவப்
படம் காட்சி தந்தது. பகலிலும் - இர
விலும் - வெயிலிலும் - மழையிலும் - தங்
களின் அருந்தவப் புதல்வனுக்கு அஞ்
சலி செலுத்த வந்திருந்த அம் மக்கள்
கண்ணீரோடும், கம்பலையோடும் கா
ட்சி தந்தனர் - இறுதி நாளில் அந்
நிலைக் கூடத்தில் மூன்று இலட்சம் மக்
களுக்கு மேல் திரண்டனர். அக்கூ
-ட்டத்தில் நானும் பேசினேன்.

திலீபனின் மரணமே
தியாகத்தில் தோய்ந்த மரணமாகும்

வாழும் போதும் மகத்தான தியாகம்
புரிந்த திலீபனின் சாவுக்குப் பிறகும்
அவனுடைய தியாகம் தொடர்ந்தது.
தான் மரித்த பிறகு தன்னுடைய உட
லைப் புதைக்கவோ, எரிக்கவோ, திலீ
பன் விரும்பவில்லை. தன்னுடைய உட
லை யாழ்ப்பல்கலைக்கழக மருத்துவகல்
லூரிக்கு அளிக்கப்பட வேண்டுமென
திலீபன் கூறியிருந்தார். எந்த யாழ்ப்
பல்கலைக்கழக மருத்துவ மாணவர்க
ளுக்கு விழிப்புணர்வுடைய திலீபன்
தொண்டாற்றினாரோ அதே யாழ்ப்
பல்கலைக்கழக மருத்துவ மாணவர்க
ளின் ஆராய்ச்சிக்கு தன்னுடைய உ
டல் பயன்படட்டும் என நினைத்தான்
திலீபன்.

3 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்த அந்த மாபெரும் கூட்டத்திற்கு நடுவில் விடுதலைப்புலி களின் இயக்கத்தின் துணைத் தலைவர் மாத்தையாவும், அவரது தோழர்களும் திலீபனின் சிவப்பெட்டியை தாங்கி வந்த மருத்துவக் கல்லூரி ஆசிரியர் களிடம் ஒப்படைத்த போது கண்ணீர் விடாதவர்கள் இல்லை. வாழ்விலும், சாவிலும் தியாக சரித்திரம் படைத்த வன் திலீபன்.

திலீபனின் உயிர்த்தியா கம் உன்னதமானது ஒப்புவமை கூற முடியாது. ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாநோன்பு இருந் து உயிர் துறந்தவன் உலகில் முதன் முதலாக திலீபன் தான். காந்தியடி களை தேசத்தந்தையாகக் கொண்டு ள்ள இந்திய அரசு தனது மக்களுக்கு இழைத்த அநீதியை காந்திய வழியி லேயே உணர்த்துவதற்காக திலீபன் நடத்தியது ஒரு அற்புதமான போராட் டம். காந்தியடிகளின் உண்மையான சீடனாக அவ்வழியில் போராடி திலீபன் உயிர்துறந்தான். ஆனால் காந்திபிற ந்த நாட்டில் அரசு அவன் சாவைஅ லட்சியம் செய்தது. அவதூறு செய்தது. திலீபனின் உயிர்த்தியாகத்தின் மூலம் அவனுக்கு முன் இந்திய அரசு அதாளபாதா ளத்திற்கு தாழ்ந்துவிட்டது.

திலீபனின் உயிர்த்தியாகம் உணர்த்தும் மகாத்தான உண்மையி

ன ராஜீவ் உணர வேண்டும். விடுதலைப் புலிகள் ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை கொண்டவர்கள். தங்கள் புரட்சி வெற்றி பெறுவதற்காக தமது உயிரை அர்ப்பணிக்க சபதம் செய்திருப்பவர்கள். பிரபாகரனிலிருந்து அனைத்து விடுதலைப்புலிகளும் இன்னமும் தங்கள் கழுத்தில் "சயனைட்" குப்பிகளை அணிந்து எந்த வேளையிலும் உயிர்த்தியாகத்துக்குத் தயாராகவே இருக்கின்றார்கள் ■

---

## காந்தி தேசத்துடனும்
## அகிம்சை பேசமுடியாது
## என்பதனை திலீபனின்
## மரணமே உணர்த்தியது.

---

ஈழத்துக் கொடுமை

### ஏற்றிய தீப்பந்தம்

தாயே தன்கையை
வயிற்றுக்குள் விட்டு
வளரும் வாரிசைக்
கலைக்கும் கொடுமை!

விதையிட்டு வளர்த்த
விருட்சத்தின் வேர்களில்
வெந்நீர் ஊற்றுகள்!

நரிகளின் ஆட்சியில்
புறாத்தோல் போர்த்திய
கழுகுகளின் கூட்டம்!
எலிகள் வீசிய வலையில்
புலிகளின் பலிகள்!

துப்பாக்கிக் கம்பத்தில்
சிவப்பு நிறச்
சமாதானக் கொடி
சின்னத் தீவில்
பட்டொளிவீசிப் பறக்கிறது!

சுதந்திரச் செடிகளின்
புரட்சிப் பூக்களில்
பிணங்களின் வாசம்!
ஒப்பந்தம் என்ற பெயரில்
தீப்பந்தம்!

ஆம்!
ஏற்றிய தீப்பந்தம்
எதிரிக்கு அல்ல-
எம் தலைக்கே!

-எஸ்.குமாரகிருஷ்ணன்

# மக்கள் நெஞ்சங்களில்....

காந்தி தவழ்ந்த பூமி - சாதுக்கள் பிறந்த பூமி - புனிதகங்கை தவழும்பூமி, எம் திலீபன் தியாகத்தால் தலை குனியப் போகிறது. சாத்வீகத்தை - சத்தியாக்கிரகத்தை அறிமுகம் செய்து வைத்து அவனியில் ஆத்மீகபலம்பெற்று விளங்கும் இந்தியா, ராஜீவ் காந்தி என்ற கல் நெஞ்சப்பேதமரால் - அவரின் அலட்சியத்தால் - ஆணவத்தால் - ஆக்கிரமிப்பால் அகிலத்தின் நல்லெண்ணத்தை - மதிப்பை - மரியாதையை இழந்து நிச்சயமாகத் தலை குனியப் போகிறது.

உமிழ் நீர் வற்றிவிட்ட ஒர் நிலையில், உணர்வுகள் உறைந்து வரும் ஒர் நிலையில் உடலின் பல பகுதிகள் இயக்கமற்று விட்ட ஒர் நிலையில், பார்க்கும் சக்தியும் - பேசும் சக்தியும் - தொட்டுணரும் சக்தியும் மரணித்து வரும் ஒர் நிலையில் பாதிப்பிணமாகிப் பாடையேறும் நேரத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் திலீபன் என்ற மாவீரத் தியாகியின் இருதயமும் உதடுகளும் வரண்டு காய்ந்து விட்ட கடைசி நிலையிலும் மக்கள்புரட்சி வெடிக்கப்போகிறது என்று தான் அடித்துக் கொண்டு முனங்கிக் கொண்டிருக்கிறது"





நான் வாழ்வேன்;
உயிர்த்துடிப்புடன் இருப்பேன்
அசையும் ஒரு சிறு காற்றில்
ஒரு பூவில், ஒரு பச்சைப் புல் இதழில்.
ஓடும் நீரின் ஒரு சிறு தாரையில்
இடையன் ஒருவனின் புல்லாங் குழலில்
சூரிய ஒளியில், மௌனத்தில்
அசையும் இறக்கைத் துடிப்பில்
நான் வாழ்வேன்;

உயிர்த்துடிப்புடன் இருப்பேன்.

என் மூதாதையரின் தாய்த்திரு நாட்டில்
இறுதிநாள் வரை,
நான் மறுபிறப் பெடுப்பேன்

வெற்றியுடனும்
சுதந்திர மனிதனின் வைகறையுடனும்
எனக்கோர் சந்திப்பு நிகழ இருப்பதால்
இறுதி நாள் வரை
நான் மறுபிறப் பெடுப்பேன்.

Published by:
LTTE
NORWAY BRANCH

THAMILAR NALANPURI MANTRAM
P.O.Box ~~119~~, Vika
0110 Oslo 1
Norway



# திலீபனின் வழியில்...

இரண்டு தேசங்களின்
துப்பாக்கிகளுக்கு முன்னால்
தமிழீழ மக்கள்
பிணங்களாய்
விழுந்துகொண்டிருக்கும்
நேரத்தில் . . .

சாவுக்கு
தமிழீழம் அஞ்சாது
என்பதை
பூபதி அன்னை
தன் சாவினால்
எதிரிகளுக்கு உணர்த்துகிறாள்

முப்பத்தொருநாள்
உண்ணாவிரதத்தின்
முடிவில்
சாவை அவள் சாப்பிட்டாள்.

உலகத்தை
ஒரு நாள்
பாலூட்டி வளர்த்த,
தாயை
உண்ணாமல் இருத்தி
சாகவைத்த பாரதமே . . .
இந்தப் பாவத்தை
எங்கே போய்க் கழுவுவாய் ?

போரை நிறுத்து,
உயிர்களைக் கொல்லாதே.
என்றாள்
பூபதி அன்னை.
நீயோ
அவள் உயிரையே
கொன்றுவிட்டாய்.

பாரதமே !
மகாத்மா காந்தி
உன் மண்ணின்
' சமாதியில் '
சுகமாக இருக்கிறாரா ?

எங்களுக்கு
இனிப் பசிக்காது.
நெருப்பாய்
நாங்கள்
தழைப்போம் ! ★